6. சட்ட முன் வடிவுகள்— அறிமுகம் செய்தல் டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை (திருத்த) சட்ட முன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்த) சட்டமுன்வடிவு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவ வர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை.)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம். நேற்றையதினம் பேசி, இடையில் நிறுத்தப்பட்டிருந்த திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் இப்போது தன்னுடைய உரையைத் தொடருவார்கள்.

3. உறுப்பினர் பேரவை பணிகளினின்றும் தற்காலிக நீக்கி வைக்கப்பெறுதல்— தொடர்ச்சி.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பரிசீலனை? (குறுக்கு)......யாராவது ஒருவர் பேசுங்கள்.